**தொம்பே பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொம்பே பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தொம்பே பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைக்கப் பெற்ற பெறுமதி ரூபா 850,554 ஆக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நன்கொடையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பெறுமதிக்குரிய காலக்கழிவுப் பெறுமதி நடைமுறையல்லா செலவினத்திற்காக | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்திலிருந்து வழங்கப்பட்ட மாற்றல்களாக ரூபா 95,410 நடப்பாண்டின் போது இனங்காணப்படாமையின் காரணமாக அப்பெறுமதியால் ஆண்டின் மிகை குறைவாகவும் மூலதன மானிய மீதி அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 40,940,885 ஆன மூலதன செலவின மானியம் விரிவான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை | 2022.12.31 இன் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மோட்டார் வாகனத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 6,187,290 பெறுமதியான 09 டிறக்டர்கள், இயந்திரத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 09 டிறக்டர்களின் பெறுமானத்தேய்வு பெறுமதி மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு சதவீதத்தின் கீழ் ரூபா 247,492 ஆக இருக்க வேண்டிய போதிலும் இயந்திர பெறுமானத்தேய்வு சதவீதத்தின் கீழ் ரூபா 309,365 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 61,873 தொகை நிதிக்கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்ட களஞ்சிய இருப்பு பெறுமதி ரூபா 19,556,553 தொகைக்குரிய வழங்கல் செலவினக் கணக்கில் வரவு வைத்து கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தக் களஞ்சிய இருப்பு கொள்வனவுப் பெறுமதி பொது களங்சியக் கணக்கில் வரவு வைத்து வழங்கல் செலவினக் கணக்கில் செலவு வைக்கும் போது ரூபா 27,897,146 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் பொதுக்களஞ்சிய மீதி ரூபா 8,340,593 வீதம் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 443,752 தொகை செலவினக் கணக்கில் வரவு வைத்ததன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டுகளில் இந்தக் கடன் தவணை பணம் உரிய ஆண்டுகளில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 2,315,856 தொகை திரண்ட நிதிய மீதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஊ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி கணக்காய்வில் கணப்பீட்டின் படி ரூபா 9,155,612 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 14,353,032 ஆனமையால் ரூபா 5,197,420 தொகை ஆண்டின் மிகை மற்றும் பெற வேண்டிய வட்டி அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) 2019 ஆம் ஆண்டில் 15 வருமான வகைகளின் கணக்கு மீதிகளை சரியான மீதியினை விட அதிகரித்தமை மற்றும் பெறுமதி ரூபா 99,962,724 தொகை ஒவ்வொரு நிலுவையாகவிருந்த வருமானக் கணக்கிலும் செலவு வைப்பதற்கு பதிலாக ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022.12.31 இன் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 15.8 இன் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 443,752 கடன் தவணைப் பணம் நடைமுறைப | | |

### 1.6.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 3 - 5 வருடங்களுக்கு இடையிலான காலவீச்சில் செலுத்தப்படாத ரூபா 731,002 மற்றும் 1 - 3 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் செலுத்தப்படாத ரூபா 4,873,735 என்பன 2022 யூன் | 1-3 வருடங்களுக்கு இடையிலான பணம் எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். 3-5 வருடங்களுக்கு இடையிலான ரூபா 731,002 எதிர்காலத்தில் பிரதேச | கடன்கொடுத்தோர் மீதியை பரீட்சித்து செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கும் கணக்கீட்டு வழுக்களை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலகங்களிலிருந்து பணம் கிடைத்த பின்னர் தீர்த்து வைக்கப்படும். | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 11,973,953 ஆக இருந்தது. காலப்பகுப்பாய்வின் படி அதில் நிலுவையாக காணப்பட்ட காலம் ஒரு வருடத்தை விட மேற்பட்ட பெறுமதி ரூபா 654,658 தொகையும், 01 இற்கும் 09 மாதத்திற்கும் இடையிலான பெறுமதி ரூபா 7,021,565 தொகையும் 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும், பட்டோலைகளில் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 4,316,967 வேறுபாடு காணப்பட்டது. | 2022 திசெம்பர் 31 இன் கணக்கில் சரிசெய்யப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலியக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (அ) | 371(2) | 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு | நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உரிய தரப்பினரை இனங்காண முடியாத ரூபா 82,656 ஆன முற்பணம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 880,389 ஆன முற்பணம் என்பன 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் தீர்க்கப்படாத முற்பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 571 | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காலாவதியான உடன்படிக்கை பிணை, கேள்வி வைப்பு நூற்றுக்கு 10 சதவீத ஒப்பந்த வைப்பு மற்றும் நானாவித வைப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,069,790 தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரச வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,034,331 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 187,187,134 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கிருத்திவல பொதுச் சந்தையின் கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக வாடகையாளர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 4 ஆவது நிபந்தனையின் பிரகாரம் வாடகை 03 மாதங்களுக்கு | பணம் செலுத்தாதுள்ள கடைகளுக்காக இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத் | உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்பட்ட காலம் தாமதிக்க முடியாதிருந்ததுடன் அவ்வாறு செய்யப்படுமாயின் ஆதனங்கள் முத்திரை வைத்து கையேற்கப்பட வேண்டிய போதிலும் 04 கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அவற்றின் 2021 சனவரி முதல் திசெம்பர் 31 வரை நிலுவையாகவிருந்த வாடகை ரூபா 393,400 ஆகும். | தருகின்றோம். | |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை** | | |
| சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட பரப்பளவு 110.92 ஏக்கர் அளவான பெறுமதி ரூபா 520,182,000 ஆன காணிக்காக உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்துறுதி இல்லாத காணிகள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரித்துறுதி பெறப்படல் வேண்டும். |
| (ஆ) **விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப் பட்ட சொத்துக்கள்** | | |
| ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 1,694,562 ஆன 02 டிறக்டர்கள் மற்றும் கைடிறக்டர், பெறுமதி குறிப்பிடப்படாத கலிபவுசர், டிறக்டர், பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது மதிப்பீடு செய்து முறையாக விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் பயனற்று காணப்பட்டது. | 2022 இன் இறுதியளவில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி குறிப்பிடப்படாத வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் அல்லது பழுதுபார்த்து பயன்படுத்து வதற்கோ அல்லது மதிப்பீடு செய்து முறையாக விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தொம்பே பிரதேச சபையால் 2010 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி தொம்பே பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற கழிவுகளுக்காக 12 ஏக்கர் 01 றூட் 16.84 பேர்ச் அளவான காணி ரூபா 450 மில்லியனுக்கு அண்ணளவான நிதி ரீதியான கிரயமொன்றை செய்து கழிவுப்பொருட்களை கொண்டு போடுவதற்காக சுகாதார கழிவுகள் வைக்கப்படுகின்ற செயற்திட்ட மொன்று கிருந்திவல மாளிகாவத்த பிரதேசத்தில் நிர்மாணிக்கப் பட்டிருந்தது. உடன்படிக்கையின் 1.5 நிபந்தனையின் படி சகல நிர்மாண நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்ட நிலம் மற்றும் சகல நிர்மாணங்களும் தொம்பே பிரதேச சபைக்கு முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் இந்த செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் இறுதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப் பட்டிருந்த போதிலும் 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அதிகார சபையினதும் மாகாண சபையின் ஆளுனர் போன்ற உத்தியோகத்தர்களின் எழுத்துமூல மற்றும் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை பொருத்தமான தீர்வு கிடைத்திருக்கவில்லை. இந்த செயற்திட்டம் தற்போது இலங்கையில் ஒரேயொரு திட்டமாக இருந்ததுடன் குறித்துரைத்த செயற்திட்டம் மற்றும் ஆய்வு கேந்திரமாக பயன்படுத்துதல் சபைக்கு கையளிக்காமையின் காரணமாக முடியாதிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் தொம்பே பிரதேச சபைக்கு முறையாக கையளித்தல் வேண்டும். |